நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஜுன் திங்கள் 8 ம் நாள் திங்கள்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.783/2026
IN
குற்ற எண்.148/2026

குபேந்திரன்
த.பெ.முத்துபாண்டியன் ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
கடையநல்லூர் கா.நி.கு.எண்.148/2026,
Sec.115(2), 133, 191(2), 296(பி), 308(5), 351(3) BNS ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தில் முன்னர் வரப்பெற்று, மனுதாரர்க்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

மனுதாரர்/எதிரிக்கு பிரிவு 480 BNS ன் கீழ் பிணை வழங்க வேண்டி பிணை மனு தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்** :–

மனுதாரர்க்கு எதிராக Sec.115(2), 133, 191(2), 296(பி), 308(5), 351(3) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும், மனுதாரர் சட்டத்தை மதித்து நடப்பவர் என்றும், மனுதாரர் ஜாமீன்தாரர்களை முன்னிருத்த தயாராக இருக்கிறார்கள் என்றும், எனவே மனுதாரர் மனுவை அனுமதிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார்.

**3. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்** :–

அரசு தரப்பில், எதிரி மீது கடையநல்லூர் காவல் நிலையத்தில் போக்கிரி பதிவேடு 807/2024 ன் படி பதிவு செய்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என்றும், மேலும், மூன்று முன் வழக்குகள் உள்ளது என்றும், 1) குற்ற எண்.217/2019 இதச பிரிவுகள் 147, 148, 294(b), 427,506(2) 2) Cr.No.337/2022 U/s.25(1A) Arms Act. 144, 294(b), 307, 353, 506(2) IPC and 20(b), (ii)(c), 29(1), 8(c) NDPS Act. மேலும் எதிரி

நிச்சயமாக சாட்சியை மிரட்ட கூடும் என்றும், மீண்டும் சாட்சியிடம் பிரச்சனை செய்யக்கூடும் என்றும், இதனால் வழக்கு விசாரணை பாதிப்பு ஏற்படும் என்றும், எனவே எதிரிக்கு பிணை வழங்க கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. தீர்வு** :–

வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, மனுதாரர் மீது Sec.115(2), 133, 191(2), 296(பி), 308(5), 351(3) BNS வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/எதிரி கடந்த 18.05.2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பது தெரியவருகிறது. முதல் தகவல் அறிக்கையில், புகார்தாரர் கடந்த 14.04.2026 ம் தேதி தான் குமந்தாபுரத்தில் இருந்து மாலை சுமார் 6.30 மணிக்கு தனது ஆட்டோவை ஓட்டிக்கொண்டு கடையநல்லூர் நோக்கி வந்து கொண்டிருந்தபோது கிருஷ்ணாபுரம் பாரத் பெட்ரோல் பல்க் அருகே உள்ள RR டீ கடை அருகில் கடையநல்லூரை சேர்ந்த முத்துப்பாண்டியன் மகன்கள் குபேந்திரன் மற்றும் சுபாஷ், திருமலைச்சாமி மகன் யோகேஷ்வரன் மற்றும் பார்வதிதேவன் மகன் ராஜ் மற்றும் சட்டநாதன் மகன் முருகேஷ் ஆகிய ஐந்து பேர் நின்று கொண்டிருந்தாகவும், அவர்கள் தனது ஆட்டோவை நிறுத்தி கடையநல்லூர் போக வேண்டும் என்று கூறியதாகவும், தானும் ஆட்டோவை நிறுத்தினேன் என்றும், ஐந்து பேரும் தனது ஆட்டோவில் ஏறியதாகவும், ஆட்டோவில் வந்து கொண்டிருக்கும் போது 5 பேரும் கடையநல்லூர் நடுப்பலுக்கு பக்கம் உள்ள ரஹ்மத் ஹோட்டலில் இறக்கி விடு என்று சொன்னதின் பேரில் அவங்க 5 பேரையும் ரஹ்மத் ஹோட்டலில் இறக்கி விட்டேன் என்றும், அப்போது தான் ஒரு ஆளுக்கு 10 ரூபாய் வீதம் 5 பேருக்கு 50 ரூபாய் தாங்க என்று கேட்டதாகவும், உடனே குபேந்திரனும் யோகேஷ்வரனும் ஆட்டோவில் இருந்த தன் சட்டையை பிடித்து வெளியே இழுத்து தன்னை பார்த்து ஏலே தேவிடியா மவனே புண்டா மவனே ஆட்டே டிரைவர்னா நீ பெரிய சுண்ணியால நாங்க யார் தெரியுமா என்று சொல்லிக்கொண்டு தனது கன்னத்தில் ஓங்கி அடித்தார்கள் என்றும், தான் எதுக்கு அடிக்கிறீங்க என்று கேட்டேன் உடனே அவருடன் வந்த ராஜ், முருகேஷ் மற்றும் சுபாஷ் ஆகியோர் சேர்ந்து தன்னை கையால் மாறி மாறி அடித்து காலால் மிதித்து கீழே தள்ளினார்கள் என்றும், அதனால் தான் வலி தாங்காமல் சத்தம் போட்டதாகவும், உடனே அந்த ஐந்து பேரும் தன்னை பார்த்து ரோட்டில் வைத்து தன் சட்டைப்பையில் இருக்குற ரூபாய எடுல

என்று மிரட்டி கேட்டதாகவும், தான் உங்களுக்கு எதுக்கு பணம் தரணும் என்று கேட்கவும் குபேந்திரன் தனது சட்டைப்பையில் இருந்த ரூபாய் 200 ஐ எடுத்துக்கொண்டதாகவும், அதன் பின்பு அவங்க 5 பேரும் சேர்ந்து அவங்க காலில் கிடந்த செருப்பால் ரூபாய் இல்லைன்னு பொய்யா சொல்ற என்று சொல்லி தன்னை மாறிமாறி அடித்து இனிமேல் எங்க ஏரியாவுல நீ ஆட்டோ ஓட்டிட்டு வந்த உன்னை வெட்டி கொன்று விடுவோம் என்று சொல்லி என்னை மிரட்டிவிட்டு போய்விட்டார்கள் என்றும், அவர்கள் என்னை மிரட்டியதால் தான் உயிருக்கு பயந்து ஆட்டோவை எடுத்து கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், மேலும், அரசு தரப்பில், எதிரி மீது கடையநல்லூர் காவல் நிலையத்தில் போக்கிரி பதிவேடு 807/2024 ன் படி பதிவு செய்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என்றும், மேலும், மூன்று முன் வழக்குகள் உள்ளது என்றும், 1) குற்ற எண்.217/2019 இதச பிரிவுகள் 147, 148,294(b), 427,506(2). 2) Cr.No.337/2022 U/s.25(1A) Arms Act. 144, 294(b), 307, 353, 506(2) IPC and 20(b), (ii)(c), 29(1), 8(c) NDPS Act. மேலும் எதிரி நிச்சயமாக சாட்சியை மிரட்ட கூடும் என்றும், மீண்டும் சாட்சியிடம் பிரச்சனை செய்யக்கூடும் என்றும், இதனால் வழக்கு விசாரணை பாதிப்பு ஏற்படும் என்றும், எனவே எதிரிக்கு பிணை கொடுக்க ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும், எதிரியை தற்போதுள்ள சூழ்நிலையில் பிணையில் விடுவித்தால் இதுபோன்ற குற்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபட வாய்ப்புள்ளது என்பதாலும், மேலும் மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்கினால் அது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இம்மனு மேற்சொன்னவாறு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் ஜீன் திங்கள் 8 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.05.31 12:20:10 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.